**பத்திரிகை செய்தி**

**மாவட்ட காலநிலை மாற்ற இயக்கம் (DCCM), மயிலாடுதுறை**

**ஆட்சேர்ப்பு அறிவிப்பு**

**மாவட்ட காலநிலை மாற்ற இயக்கம் (DCCM), மயிலாடுதுறை** சார்பில் **தொழில்நுட்ப உதவியாளர்** பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய **01 காலியிடம்** நிரப்பப்பட உள்ளது. இப்பணிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் உயிர்அறிவியல் (Life Science), சுற்றுச்சூழல் அறிவியல் (Environmental Science), சூழலியல் (Ecology), வனவியல் (Forestry), வனவிலங்கியல் (Wild Life), பொதுக்கொள்கை (Public Policy) அல்லது அதற்கு தொடர்புடைய துறைகளில் ஏதேனும் ஒன்றில் இளநிலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். மேலும், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் அடிப்படை தட்டச்சுத் திறன் பெற்றிருக்க வேண்டும். குறைந்தது ஒரு வருட பணி அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பதாரர் மயிலாடுதுறை மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும். அதிகபட்ச வயது 40 மற்றும் அதற்கு கீழ் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இப்பணிக்கான மாதாந்திர தொகுப்பூதியம் **ரூ.22,000/-** ஆகும். ஒப்பந்த காலம் **19 மாதங்கள்** ஆகும். பணியிடம் **மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் / மாவட்ட வன அலுவலகம், மயிலாடுதுறை** ஆகும். பணியின் ஒரு பகுதியாக சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையின் செயல்பாடுகள் தொடர்பான அலுவலகப் பயணங்கள் மற்றும் பொருந்தக்கூடிய விதிமுறைகளின்படி ஒதுக்கப்படும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தேவையான ஆவணங்களுடன் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ கீழ்க்கண்ட அலுவலக முகவரியில் சமர்ப்பிக்கலாம்: **மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஆறாம் தளம், அறை எண் 612 மாவட்ட ஆட்சியரகம், மயிலாடுதுறை - 609305.** விண்ணப்பங்கள் **22-10-2026 முதல் 27-10-2026 வரை காலை 10.00 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரை** சமர்ப்பிக்கலாம். மேலும், விண்ணப்பங்களை cmgfp.myd@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலும் சமர்ப்பிக்கலாம்.

விண்ணப்பத்துடன் **10ஆம் வகுப்பு சான்றிதழ், 12ஆம் வகுப்பு சான்றிதழ், இளங்கலைப் பட்டம் / பட்டயச் சான்றிதழ், அரசால் வழங்கப்பட்ட அடையாள அட்டை, முகவரிச்சான்று மற்றும் பணி அனுபவத்திற்கான அனுபவச் சான்றிதழ்** ஆகியவற்றை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். தேவையான அனைத்து ஆவணங்களையும் விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிப்பது விண்ணப்பதாரர்களின் பொறுப்பாகும்.

**விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள்: 27-10-2026 செவ்வாய் கிழமை மாலை 6.00 மணி வரை.** குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள் வரப்பெறும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

Sri 22/10

**மாவட்ட ஆட்சித்தலைவர்.**

**மயிலாடுதுறை.**